## மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

**மானியக் கோரிக்கை எண்.52**

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015–2016


## திருமதி பா. வளர்மதி

**சமூகநலம் மற்றும்**
**சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2015

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015–2016

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

**முன்னுரை:**

மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் ஒரு முக்கியமான அங்கம் என்பதனை உணர்ந்து, அவர்களின் வளர்ச்சிக்கு சிறப்பான அணுகுமுறை அவசியம் என்ற சீரிய நோக்கோடு மாற்றுத்திறனாளிகளின் நலத்தை பேணுவதற்கென்று தமிழக அரசு தனித்துறை ஒன்றை 1993ம் வருடம் அமைத்து பல்வேறு வகையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பின்னர், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக முழுமையான மாநில கொள்கையை 1994ம் ஆண்டில் உருவாக்கியது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டங்களுக்கு அதிக அளவிலான நிதி ஒதுக்கீடுகளுடன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினருடன் ஒருங்கிணைந்து சமமாக வாழும் நிலையினை அடைய வேண்டிய தொலைநோக்குடன் தமிழக அரசு திட்டங்களை செயல்படுத்துகிறது.

**2011** ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி **11.79** இலட்சம் மாற்றுத்திறனாளிகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகையில் **4.40** சதவிகிதமும், தமிழக மக்கள் தொகையில் **(7.21** கோடி**) 1.64** சதவிகிதமும் மாற்றுத்திறனாளிகள் என கணக்கிடப்பட்டுள்ளது.

**2. மாற்றுத்திறனாளிகள் (சமவாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995 செயல்படுத்துதல்:**

மாற்றுத்திறனாளிகள் எத்தகைய இயல்பானவர்களானாலும், எந்த பூர்வீகத்தைச் சார்ந்தவரானாலும், எவ்வாறான கடுமையான குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் இதர சாதாரண நிலையில் உள்ள மனிதர்களுக்கு நிகராக அனைத்து வகையிலும் சம உரிமைகள் பெற்று தரமான வாழ்வு பெற தேவையான அடிப்படை உரிமைகளை பெறும் வகையில் மாற்றுத்திறனாளிகள் சட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கம் மாற்றுத் திறனாளிகளை சமுதாயத்துடன் ஒருங்கிணைப்பதே ஆகும். மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், இச்சட்டத்தின்

செயல்பாட்டினை கண்காணித்து வருகிறார். இந்தியாவிலேயே இத்தகைய சட்டத்தினை முழுமையாக நிறைவேற்றும் முன்னோடி மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. இதனால் மத்திய அரசால் 2013ம் ஆண்டின் சிறந்த மாநில விருதினைப் பெற்றுள்ளது.

**3. புற உலகு சிந்தனையற்றோர், மூளை முடக்கு வாத நோயால் பாதிக்கப்பட்டோர், மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனத்தால் பாதிக்கப்பட்டோர் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம் –1999**

மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்திலும் அவர்கள் வாழும் குடும்பத்திலும் தன்னிச்சையாக ஒருங்கிணைந்து வாழத் தகுந்த சமூக சூழ்நிலை இச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் அறக்கட்டளை மற்றும் மாவட்ட அளவில் உள்ளூர் மட்டக்குழு ஏற்படுத்தப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ளூர் மட்டக்குழு 32 மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இக்குழு இச்சட்டத்தைப் பற்றியும் பாதுகாவலர் நியமனம் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தன்னார்வ தொண்டு

நிறுவனங்களுக்கு அறக்கட்டளையின் செயல்பாடுகள் பற்றியும் விளக்கும். மாநிலம் முழுவதும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின் பிரிவுகளை செயல்படுத்த மாநில முகமையாக ஸ்பாஸ்டிக் சொசைட்டி ஆப் தமிழ்நாடு என்னும் நிறுவனம் திகழ்கிறது.

## 4. ஊனத்திற்கான சான்று, தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவுப் புத்தகம் வழங்குதல்

### 4 (அ) ஊனத்திற்கான சான்று பெறுவதற்கான வழிமுறைகள்

மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் குறைபாட்டிற்கும், வயதிற்கும் ஏற்ற வகையில் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்படுகிறது. இதனைப் பெறுவதற்கு தேவையான அடையாள அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) விதிகள் 2002இல் உருவாக்கப்பட்டுள்ள வழிமுறைகளை எளிதாக்கியும் மற்றும் முறைப்படுத்தியும் அரசாணை (நிலை) எண்:21, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 17.6.2011ல் திருத்தம்

வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மையங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் ஊனத்திற்கான சான்றிதழ் வழங்கும் வகையில் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

ஊனத்திற்கான சான்றிதழ் வழங்கும் மருத்துவ அதிகாரக்குழு மற்றும் மருத்துவர்களை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளது:—

| **வ எண்** | **ஊனத்தின் தன்மை** | **ஊனத்திற்கான சான்று வழங்கும் "மருத்துவ அதிகாரக் குழு"** | **ஊனத்திற்கான சான்று வழங்கும் மருத்துவர்** |
|---|---|---|---|
| 1 | கை, கால் ஊனமுற்றோர் உறுப்புகள் துண்டிக்கப் பட்டோர் அல்லது முழுமையான நிரந்தர கை, கால் செயலின்மை | அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் மருத்துவ மனைகள்/ நிறுவனங்கள்/ ஆரம்ப சுகாதார நிலையங்கள் | அரசு/ உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் மருத்துவமனைகள் / நிறுவனங்கள்/ ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் ஏதேனும் ஒரு மருத்துவர் |

| | | | |
|---|---|---|---|
| 2 | ஒன்றுக்கு மேற்பட்ட ஊனம் | மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் நிறுவனங்கள் நடத்தும் சிறப்பு மருத்துவர் மற்றும் பரிசோதனை வசதிகள் அடங்கிய மாவட்ட மருத்துவமனைகள், பிற மருத்துவமனைகள் | மூன்று மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக் குழுவில் ஒரு மருத்துவர், சம்மந்தப்பட்ட ஊனத்தின் சிறப்பு மருத்துவராக இருக்க வேண்டும். |
| 3 | மேலே வரிசை எண் 1 மற்றும் 2ல் குறிப்பிடாத ஊனங்கள் | அரசு உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் நிறுவனங்கள்/ மருத்துவமனைகள்/ அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் | கீழே இதற்கென அரசு நிர்ணயித்துள்ள சிறப்பு மருத்துவர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சிறப்பு மருத்துவர் |

மேலே வரிசை எண் 3ல் குறிப்பிட்டுள்ள ஊனங்களுக்கான சான்றிதழை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கும் சிறப்பு மருத்துவர் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | **ஊனத்தின் வகை** | **சிறப்பு மருத்துவர்** |
|---|---|---|
| 1 | மூளை முடக்குவாதம் | இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வு அல்லது எலும்பியல் மருத்துவர் அல்லது குழந்தை நல மருத்துவர் குழந்தை நரம்பியல் மருத்துவர் அல்லது மனநல மருத்துவர் |
| 2 | காது கேளாமை | காது, மூக்கு, தொண்டை நிபுணர் |
| 3 | தொழுநோய் பாதித்து குணமடைந்த நிலை | இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வு அல்லது எலும்பியல் மருத்துவர் அல்லது தோல் மருத்துவர் |
| 4 | கை, கால் பாதிப்பு; கை, கால் துண்டிக்கப்பட்டவர் அல்லது முழுமையான நிரந்தர கை, கால் செயலின்மை | இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வு அல்லது எலும்பியல் மருத்துவர் |
| 5 | மனநலம் பாதிப்பு | மனநல மருத்துவர் |
| 6 | மனவளர்ச்சிக் குறைவு | <u>12வயதிற்குட்பட்ட மனவளர்ச்சி குன்றியோர்:</u> குழந்தை நல மருத்துவர், குழந்தை நல நரம்பியல் மருத்துவர், மனநல மருத்துவர் <u>12 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோர்:</u> மனநல மருத்துவர் |

| | | |
|---|---|---|
| 7 | பார்வைக் குறைபாடு/ பார்வையின்மை | கண் மருத்துவர் |
| 8 | புற உலகு சிந்தனையற்ற நிலை | மனநல மருத்துவர் அல்லது குழந்தைகள் நல மருத்துவர் அல்லது நரம்பியல் நிபுணர் |

## 4 (ஆ) தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவுப் புத்தகம் வழங்கும் வழிமுறைகள்

தமிழகத்தில் உள்ள அனைத்துத் தகுதிவாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 40 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் ஊனத்தின் விழுக்காடு இருந்து, ஊனத்திற்கான சான்றிதழ் பெற்ற மாற்றுத் திறனாளிகள், சம்மந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தை அணுகி, பதிவு செய்ய வேண்டும். குடும்ப அட்டையில் முத்திரை இட்ட பிறகு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அதனை பதிவு செய்து, தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவு புத்தகத்தை வழங்குவார். தேசிய அடையாள அட்டை பெற்ற மாற்றுத்திறனாளிகள் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் உறுப்பினராக பதிவு செய்து வாரியத்தின்

சமூக பாதுகாப்பு மற்றும் நல திட்டங்களின் பயன்களை பெறலாம். தமிழகத்தில் இதுவரை **11,12,893 (31.03.2015** வரை) மாற்றுத்திறனாளிகளுக்கு ஊனத்திற்கான சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 5. மாற்றுத்திறனாளிகளுக்காக சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் பதிவு செய்தல்

### 5 (அ) மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்

தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டம், **1973**–ன்படி, தமிழகத்தில் செயல்படும் மாற்றுத்திறன் கொண்ட மாணவ, மாணவியருக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரால் வழங்கப்படுவதோடு, உரிய காலத்தில் அங்கீகாரம் புதுப்பிக்கப்படுகிறது. இதுவரை 377 சிறப்புப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 5(ஆ) மாற்றுத்திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல்

மாற்றுத்திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் **1995**ன்படி,

மாற்றுத்திறனாளிகளுக்காக சேவை புரியும் எந்த ஒரு நிறுவனமும், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழினை பெறவேண்டியது மிகவும் அவசியம். மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மட்டுமே, பதிவுச்சான்றிதழை வழங்கும், புதுப்பிக்கும் மற்றும் ரத்து செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார். இதுவரை **523** மாற்றுத்திறனாளிகளுக்கான நிறுவனங்களுக்கு பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

## 5. (இ) மனநல மறுவாழ்வு மையங்கள் பதிவு

தமிழ்நாடு மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள் பதிவு விதிகள் **2002**ன் அடிப்படையில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனநல மறுவாழ்வு மையங்கள், முறைப்படுத்தப்படுகிறது. இவ்விதிகளின்படி, இம்மையங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும். இவ்விதிகளை அமுல்படுத்துவதால், அனுமதியற்ற மையங்கள் செயல்படுவது தடுக்கப்படுவதோடு, அனுமதிப்பெற்ற மையங்களை வரன்முறைப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் சாத்தியமாகிறது.

## 6. செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்பநிலையில் கண்டறியும் மையம்

பிறவியிலேயே ஏற்படும் குறைபாடுகளில் இன்றும் செவித்திறன் குறைபாடு பொதுவான ஒன்றாகவே இந்தியாவில் நிலவுகிறது. கடுமையான மற்றும் மிதமான செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்ப நிலையில் கண்டறிவது என்பது மிகவும் முக்கியமானதாகும். ஆரம்பநிலையில் கண்டறிவதால் இக்குழந்தைகள் சரியான காதொலிக் கருவிகளை பொருத்தி ஆரம்ப நிலை பயிற்சியும் 6 மாதத்திற்குள்ளே தொடங்க முடியும். எனவே, உயரிய தொழில்நுட்பம் வழங்கப்படுவதன் மூலம் ஆரம்ப நிலையிலேயே குழந்தை பிறப்பிலிருந்து குழந்தை பருவம் வரை செவித் திறன் குறைபாட்டினை கண்டறிய வழிவகை உள்ளன. தற்போது, செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்பநிலையில் கண்டறியும் மையம் 27 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. செவித்திறன் பரிசோதனைகளில் உட்செவி மற்றும் நரம்பு பரிசோதனை (OAE) மற்றும் மூளை தண்டுவடச் சோதனை (ABR) ஆகிய பரிசோதனைகள் இந்த மையங்களில் செய்யப்படுகிறது. ஒவ்வொரு மையங்களிலும் அதிக எண்ணிக்கையிலான

குழந்தைகளுக்கு பரிசோதனையும் மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

## 7. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

குழந்தைகள் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிகள், மனிதனின் கற்றல் மற்றும் வளர்ச்சியின் வேகம் குழந்தை பருவத்தில் தான் மிகவும் துரிதமாக உள்ளதாகத் தெரிவிக்கிறது. செயல்திறன் பாதிப்புக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்ப நிலை பயிற்சி மூலம், இயல்பான நிலையில் வாழ்வில் குழந்தை பருவத்தில் பெறக்கூடிய வளர்ச்சி அனுபவத்தினை இழக்கும் அபாயத்தினை தவிர்க்கலாம். இதனை கருத்தில் கொண்டு, பல்வேறு வகையான மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. அனைத்து மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் அவர்களுடன் வரும் பாதுகாவலர் ஆகியோர் அவர்கள் வீடுகளில் இருந்து ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு வந்து திரும்பிச் செல்ல அவர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களின் மதிப்பூதியம் மாதம் ரூ.5000/–லிருந்து ரூ.10,000/– ஆக டிசம்பர் 2012லிருந்து உயர்த்தி வழங்கப் படுகிறது.

## 7(அ) செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள்

செவித்திறன் குறைபாடு என்பது மரபு வழியில் பொதுவாக ஏற்படும் குறைபாடுகளில் ஒன்றாக, 1000 நபர்களுக்கு 2லிருந்து 4பேர்களிடம் காணப்படுகிறது. வயதிற்கேற்ற பேச்சுத்திறன் மொழித்திறன் அறியும் திறமை ஆகியவற்றின் வளர்ச்சியில் செவித்திறன் முக்கியத்துவம் வகிப்பதால், ஆரம்ப நிலையில் இக்குறைபாட்டினை கண்டறிந்து பயிற்சி அளிப்பது மிகவும் அவசியமாகும். எனவே, செவித்திறன் பாதிக்கப்பட்ட மழலையர் மற்றும் இளங்குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள், குழந்தைகள் 5 வயதை அடையும் முன்னரே பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி பெற்று 1–ஆம் வகுப்பில் சேருவதற்கு ஆயத்தமாகும் அளவிற்கு தீவிர பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் 30 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுத்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. **2½** வயதிற்கு குறைவான வயதுடைய செவித்திறன் மட்டும் பாதிக்கப்பட்டு, கூடுதல் ஊனம் ஏதும் இல்லாத குழந்தைகள் இம்மையங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். சேர்க்கைக்குக் குறைந்தபட்ச வயது வரம்பு ஏதும் இல்லை. இருப்பினும் பெற்றோரில் ஒருவர் குழந்தையுடன் மையத்திற்கு வந்து பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

சென்னையில் இயங்கும் பாலவித்யாலயா செவித்திறன் குறையுடைய இளஞ்சிறார்களுக்கான பள்ளியால் உருவாக்கப்பட்ட "த்வனி" (DHVANI) பாடத்திட்டம் இந்த ஆரம்பப் பயிற்சி மையங்களில் பின்பற்றப்படுகிறது. இம்மையங்களில் கற்பித்தல், கற்றல் விளையாட்டுப் பொருட்கள் ஆகியவை செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காகவும், அவர்களுடைய பெற்றோர்களுக்காகவும், வழங்கப்படுகிறது. இதுவரையில் **0–3** வயதிற்குட்பட்ட **896** செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இம்மையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும், இம்மையங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தவும் மற்றும்

திறமையை வளர்க்கவும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையில் மேலும் ஒரு ஆரம்பநிலைப் பயிற்சி மையம் 2014–2015இல் நிறுவப்பட்டுள்ளது.

**2015 –2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.92.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 7(ஆ) மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

**6** வயதிற்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் **31** மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகிறது. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்/குடும்பத்தினரை பயிற்றுவித்து, அதன் மூலம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இயக்கம், அன்றாடச் செயல்கள் சமூகத்துடன் ஒட்டுறவாடுதல் மற்றும் பிற திறன்களை வளர்ப்பதே இம்மையங்களின் நோக்கமாகும்.

சென்னையில் உள்ள மதுரம் நாராயணன் மையத்தால் உருவாக்கப்பட்ட “உபநயன்” என்ற பாடத்திட்டத்தின் மூலம் இம்மையங்களில் தாமதமாக வளர்ச்சியடையும் குழந்தைகளுக்கும், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும் முறையான மற்றும் திட்டமிட்ட பயிற்சியளிக்கப்படுகிறது. கற்பித்தல், கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இம்மையங்களில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக வழங்கப்படுகிறது. இம்மையங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1587 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு இம்மையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

**2015 – 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.218.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7 (இ) பார்வை குறைபாடுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப கால பயிற்சி மையம்

கண்பார்வையற்ற சிறு குழந்தைகளின் தேவை மிகவும் தனித்துவம் வாய்ந்ததாகும். அதனை பூர்த்தி செய்வதற்கு சிறப்புமிக்க ,ஆரம்ப கால பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும். பிறவியிலேயே கண்பார்வையற்ற மற்றும் கண்பார்வை குறைவுடைய குழந்தைகளின் உலகத்தினை புரிந்துகொள்ளும் அனுபவம் மாறுபட்டதாக இருக்கும். எனவே இக்குழந்தைகளின் கற்றலின் வளர்ச்சி 85% தாமதமாக இருக்கிறது. இந்நிலையில் ஆரம்ப கால நிலையிலேயே அவர்களின் பார்வை திறன்களை வளர்ப்பதற்கு, ஊக்கப்படுத்துதல் பயிற்சி அளிக்க வேண்டும். கண் பார்வையற்ற குழந்தைகளுக்கான ஆரம்ப கால பயிற்சி மையங்கள் 9 மாவட்டங்களில் செயல்படுகின்றன. திருச்சி, கோயம்புத்தூர், கடலூர், சென்னை, சேலம், வேலூார், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலுள்ள இம்மையங்கள் தொண்டு நிறுவனங்களின் கீழ் செயல்படுகின்றன. 6 வயதிற்குக்

கீழ் உள்ள **163** கண் பார்வையற்ற குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைகிறார்கள்.

**2015 – 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 34.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7(ஈ) மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம், திருச்சி மாவட்டம்**

மூளை முடக்குவாதம் என்பது ஒரு அசாதாரணமான நிலை. இதனைக் குணப்படுத்தத் தசைப் பயிற்சியாளர், தொழில்முறை பயிற்சியாளர், பேச்சுப் பயிற்சியாளர் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் ஆகிய பல்துறை நிபுணர்கள் கொண்ட குழுவின் மூலம் பயிற்சி தேவைப்படுகிறது. இம்மையங்களில் இக்குழுவினர் ஒருங்கிணைந்து **3** வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மழலை தூண்டுதல் பயிற்சியும், **3–6** வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு குறித்த காலத்திற்குள் தூண்டுதல் பயிற்சியும் அளிக்கின்றனர். திருச்சியிலுள்ள இம்மையத்தில் **50** மூளை முடக்குவாத குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

**2015 –2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.7.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7(உ) புற உலக சிந்தனையற்ற குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் – திருநெல்வேலி**

மன இறுக்கம் அல்லது புற உலக சிந்தனை அற்றவர்களுக்கு தனித்துவம் வாய்ந்த பயிற்சி தேவைப்படுகிறது. இவர்களுக்கு இம்மையத்தில் ஆரம்ப நிலைப் பயிற்சி மூலம் சமூகத் தூண்டுதல்கள், பிரதிபலிப்பு திறன், மொழி, அறிவை புரிந்து கொள்ளும் திறன், பயன்படுத்தும் திறன் முறையான விளையாட்டுத்திறன், மற்றும் சமூகப் பயிற்சி இவை அனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. **2013–14** ஆம் ஆண்டில் ஒரு முன்னோடி திட்டமாக திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆரம்பப் பயிற்சி மையம் தொடங்கப்பட்டது. **25** குழந்தைகள் இம்மையத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.

**2015–2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**7(ஊ) ஆரம்பப் பயிற்சி மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் சத்துணவு வழங்குதல்**

மாற்றுத் திறனுடைய குழந்தைகளும் சத்து குறைவினால் உடல் நிலை சாதாரண குழந்தைகளை போல் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் இவர்களுக்கு அடுத்தடுத்து வளர்ச்சி படிகளை அடைவதில் தாமதம் ஏற்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சி நிலையிலும் பாதிப்பு ஏற்படுகிறது. மேற் குறிப்பிட்ட காரணங்களைக் கொண்டு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. ஆரம்பப் பயிற்சி மையங்கள் தங்கள் அருகிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் இருந்து குழந்தைகளுக்கு இணை மற்றும் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 82 ஆரம்ப பயிற்சி மையத்தில் பயிலும் மாற்றுத் திறனுடைய 2947 குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

**2015 –2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.4.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 8. மாநில வள மற்றும் பயிற்சி மையம் சென்னை மாவட்டம்

அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சிறப்புச் சேவைகள் மற்றும் அனைத்துத் தகவல்களும் ஒரே இடத்தில் வழங்கும் நோக்கத்தோடு சென்னையில் மாநில வள மற்றும் பயிற்சி மையம் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளுக்கும் ஊனத்திற்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் இம்மையத்தில் வழங்கப்படுகிறது. 2014–2015ஆம் ஆண்டில் 14,500 ஊனத்திற்கான சான்றிதழ்கள் பயனாளிகளுக்கு இம்மையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. செவித்திறன் பாதிக்கப்பட்ட, மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட, பார்வை குறைபாடுடைய, புற உலகுச் சிந்தனையற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மற்றும் புலன் சார்ந்த ஒருங்கிணைப்பு மையம் ஆகியவையும் இப்பயிற்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 6 வயதிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனுள்ள குழந்தைகள் இம்மையத்தில்

அனுமதிக்கப்படுகின்றனர். பல்வேறு வகையான தொழிற் பயிற்சி வகுப்புகளும் இம்மையத்தில் நடத்தப்படுகின்றன.

**2015 –2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.27.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**8(அ) வட்டார வள மற்றும் பயிற்சி மையம், திருச்சி மாவட்டம்**

தென் மாவட்டங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திருச்சியில் வட்டார வள மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்பட்டு, திருச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு சென்னை மாவட்டத்தின் மையத்தினைப் போன்றே செயல்பட்டு வருகிறது.

**2015–16ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 14.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 9. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள்

மனநலம் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது அரசின் முக்கிய கடமையாகும். இவ்வாறாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களையும் அன்றாட வாழ்வில் இதர நோயாளிகளைப் போல கவனம் செலுத்தி சிகிச்சை அளித்து அவர்களை இயல்பான நிலைக்கு கொண்டு வருவதை மிக முக்கிய நோக்கமாகக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உறைவிடம், உணவு, மருத்துவம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை வழங்குவதற்காகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் தூத்துக்குடி, இராமநாதபுரம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், கடலூர், மதுரை, கோயம்புத்தூர், திருவாரூர், வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான 11 இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் மீதமுள்ள 21 மாவட்டங்களிலும் டிசம்பர் 2014 முதல்

துவக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் அதிகபட்சமாக 50 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படுவர். 2014–2015ஆம் ஆண்டில், 1580 மனநலம் பாதிக்கப்பட்ட நபர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெற்றுள்ளார்கள்.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.286.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

<u>**சிறப்புக் கல்வி**</u>

**10. மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளின் சிறப்புக் கல்விக்கான உதவிகள்**

தமிழக அரசு மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள், எந்த நிலையிலும் பொதுக்கல்வியினை பெறும் வாய்ப்பினை இழக்கும் நிலையினை தவிர்க்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்காக சிறப்பு கல்வியினை இக்குழந்தைகளுக்காக அளித்து வருகிறது. மாநிலம் முழுவதிலும் செயல்படும் 77 அரசு மற்றும் அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகளில், மாற்றுத்திறனாளி மாணவ மாணவியருக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. இவற்றில் 23 அரசு சிறப்புப் பள்ளிகளும்

(பார்வையற்றோருக்கு10, காது கேளாதோருக்கு 11, கடுமையாக கை–கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 1 மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு 1) மற்றும் 54 அரசு உதவி பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பள்ளிகளும் அடங்கும்.

23 அரசு சிறப்புப் பள்ளிகளுள், பூவிருந்தவல்லி (ஆண்கள்), திருச்சி (பெண்கள்) மற்றும் தஞ்சாவூர் ஆகிய மூன்று பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளிகளும், தருமபுரி, மற்றும் தஞ்சாவூரில் உள்ள இரண்டு காதுகேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளிகளும் அடங்கும்.

இச்சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவு மற்றும் தங்குமிடம் கட்டணமின்றி அரசால் வழங்கப்படுகிறது. மேலும், விளையாட்டு கருவிகள், கற்றல் மற்றும் கற்பித்தல் பொருட்கள் மற்றும் சூரிய ஒளியின் மூலம் தண்ணீரை சூடேற்றும் கருவிகளும், அதிக திறன் கொண்ட சலவை இயந்திரங்களும் இச்சிறப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர் ஆண்டிற்கு ஒரு முறை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

உதவிபெறும் பள்ளிகளுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. **2012–2013**ஆம் ஆண்டு முதல் மாதமொன்றுக்கு, மாணவர் ஒருவருக்கு ரூ.**450/–**லிருந்து ரூ.**650/–** ஆக உணவூட்டுச் செலவினம் உயர்த்தப்பட்டுள்ளது. **2014 – 2015**ஆம் ஆண்டு முதல் பள்ளிகளுக்கு தினசரி வந்து செல்லும் மாணவர்களுக்கும் பிற மாணவர்களைப் போன்று மதிய உணவு வழங்கப்படுகிறது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.2196.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 11. கல்வி உதவித் தொகை

மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு உயர் கல்வியைத் தொடர, அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் அவர்களது கல்வித் தகுதிக்கேற்ப கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. **2013–2014**ம் நிதியாண்டு முதல் கல்வி உதவித் தொகையினை கீழ்க்கண்டவாறு இருமடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது:

| வ. எண் | வகுப்பு | ஒரு மாணவருக்கு ஒரு வருடத்திற்கு வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| 1 | 1 முதல் 5 வரை | ரூ. 1000/– |
| 2 | 6 முதல் 8 வரை | ரூ.3000/– |
| 3 | 9 முதல் 12 வரை | ரூ.4000/– |
| 4 | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.6000/– |
| 5 | தொழிற்கல்வி / பட்ட மேற்படிப்பு | ரூ.7000/– |

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.650.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 12. வாசிப்பாளர் உதவித் தொகை

பார்வையற்ற மாணவர்களின் கற்றல் செயல்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் 9ஆம் வகுப்பு முதல் முதுநிலை பட்டப் படிப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு, வாசிப்பாளர் உதவித் தொகை அரசால் வழங்கப்படுகிறது. **2013–2014**ம் நிதியாண்டு முதல் வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டு, கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:–

| வ. எண் | வகுப்பு | வாசிப்பாளர் உதவித் தொகை ஒரு மாணவருக்கு–ஒரு வருடத்திற்கு |
|---|---|---|
| 1 | 9 முதல் 12 வரை | ரூ.3000/– |
| 2 | இளங்கலை பட்டப்படிப்பு | ரூ.5000/– |
| 3 | தொழிற்கல்வி / பட்ட மேற்படிப்பு | ரூ.6000/– |

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.101.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 13. பார்வையற்ற மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை

9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுதுவதை எளிதாக்கும் வகையில் அவர்களுக்காகத் தேர்வு எழுத நியமிக்கப்படும் உதவியாளர்களுக்கு, தேர்வுத் தாள் ஒன்றுக்கு உதவித் தொகையாக ரூ.250/– வழங்கப்பட்டு வந்தது. 2015-16-ம் ஆண்டு முதல் இத்தொகையானது ரூ.300/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும்

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட **6** சிறப்புப் பள்ளிகளில் பயிலும் சுமார் **500** மாணவர்கள் பயன்பெறுகின்றனர்:–

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி.
2. பார்வையற்யோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்.
4. சிறுமலர் பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை.
5. புனித லூயிஸ் பார்வையற்றோருக்கான பள்ளி அடையாறு, சென்னை.
6. பார்வையற்றோருக்கான இந்திய சங்கம் மேல்நிலைப் பள்ளி, மதுரை

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.32.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 14. அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகம் வழங்குதல்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் **1** முதல் **12**ஆம் வகுப்பு வரை பயிலும்

மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு தமிழ் நாடு பாடநூல் கழகம் மூலம் விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.15.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 15. அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகள்

அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு 4 இணைச் சீருடைகள் வழங்கப்படுகிறது. 2012–2013ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த 2 இணைச் சீருடைகள், 4 இணைச் சீருடைகளாக உயர்த்தி வழங்கப்பட்டது. 2014–2015ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 1387 மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.14.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 16. பார்வைத்திறன் குறையுடைய மாணவர்களுக்கான உயர் தொழில் நுட்ப கல்வி உபகரணம் (Angel Pro Digital Daisy Player)

உயர் கல்வி பெறும் பார்வையற்ற மாணவர்களுக்கு நவீன கையடக்கமான உயர் தொழில் நுட்ப கல்வி உபகரணமான ஒலிப்பதிவு கருவி மூலம் அவர்கள் எளிதில் புத்தகத்தில் உள்ள பாடங்களை பதிவு செய்து கொண்டு, கல்வி பயில ஏதுவாக ரூ.12.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 178 மாணவர்கள் பயனடையும் வண்ணம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## 17. மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி

அரசு / அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயிலும் பார்வையற்ற மற்றும் காது கேளாத மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில், 1056 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளன.

**18. பார்வையற்ற மாணவ / மாணவியர்களின் கல்வி உதவிக்காக குறுந்தகடு இயக்கிகள் (**DVD Player**) வழங்குதல்**

பார்வையற்ற மாணவ, மாணவியர்கள் வளர்ந்து வரும் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் திருச்சிராப்பள்ளி, பூவிருந்தவல்லி மற்றும் தஞ்சாவூரிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் **10**ஆம் வகுப்பு முதல் **12**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு குறுந்தகடு இயக்கிகளுடன் பல்வேறு பாடங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள், மற்றும் தனிமுறைக்குரல் வாங்கி (Head Phone) போன்ற துணைச் சாதனங்கள் வழங்கப்படுகின்றன. **2014–2015**ஆம் ஆண்டில் **114** மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.4.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 19. பள்ளியிலிருந்து இடைநிறுத்தம் செய்வதை தவிர்க்க ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்கள் பள்ளியிலிருந்து இடைநிறுத்தம் செய்யாமல் தங்கள் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில், ரொக்க ஊக்கத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2014–2015ஆம் ஆண்டில் 1243 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

| வ. எண் | வகுப்புகள் | ஆண்டிற்கு ரொக்க ஊக்கத் தொகை |
|---|---|---|
| 1 | 10ஆம் வகுப்பு | ரூ. 1,500/– |
| 2 | 11ஆம் வகுப்பு | ரூ. 1,500/– |
| 3 | 12ஆம் வகுப்பு | ரூ. 2,000/– |

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.20.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 20. அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு ரொக்கப் பரிசு

10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று, அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் பார்வையற்ற மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2012–2013ஆம் ஆண்டு முதல், மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் பார்வையற்ற மற்றும் காது கேளாத மாணவர்களுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு உயர்கல்வி தொடரவும், புத்தகங்கள் வாங்கவும் மற்றும் விடுதிக் கட்டணத்தைச் செலுத்துவதற்காகவும் கீழ்க்கண்டவாறு ரொக்கப் பரிசுள் வழங்கப்படுகின்றன.

| மாநில அளவில் | பார்வையற்றவர்கள் | | காது கேளாதவர்கள் | |
|---|---|---|---|---|
| | 10ஆம் வகுப்பு | 12ஆம் வகுப்பு | 10ஆம் வகுப்பு | 12ஆம் வகுப்பு |
| I | ரூ.25,000/– | ரூ.50,000/– | ரூ.25,000/– | ரூ.50,000/– |
| II | ரூ.20,000/– | ரூ.30,000/– | ரூ.20,000/– | ரூ.30,000/– |
| III | ரூ.15,000/– | ரூ.20,000/– | ரூ.15,000/– | ரூ.20,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| **மாவட்ட அளவில்** | | | | |
| I | ரூ.6,000/– | ரூ.12,000/– | ரூ.6,000/– | ரூ.12,000/– |
| II | ரூ.4,000/– | ரூ.7,500/– | ரூ.4,000/– | ரூ.7,500/– |
| III | ரூ.3,000/– | ரூ.4,500/– | ரூ.3,000/– | ரூ.4,500/– |
| **உயர் கல்வி தொடர உதவி** | **பார்வையற்றவர்கள்** | | **காது கேளாதவர்கள்** | |
| உயர் கல்வி தொடர | ரூ.1,500/– | ரூ.3,000/– | –– | –– |
| பாடப் புத்தகங்கள் வாங்க (பார்வையற்றவர்களுக்கு பிரெய்லி புத்தகங்கள்) | ரூ.3,000/– | ரூ.4,000/– | ரூ.1,000/– | ரூ.3,000/– |
| விடுதிச் செலவினம் | ரூ.2,000/– | ரூ.3,000/– | ரூ.1,000/– | ரூ.1,000/– |

## ரொக்கப் பரிசுகள்

**2014–2015**ஆம் நிதியாண்டில், பார்வையற்றவர்கள் மற்றும் காது கேளாதோருக்கென ரூ.**79.30** இலட்சங்கள் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. (பார்வையற்றவர்களுக்கு = ரூ.**56.31** இலட்சங்கள்+ காது கேளாதோர்களுக்கு = ரூ.**22.99** இலட்சங்கள்)

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 130.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 21. செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பி.காம் மற்றும் பி.சி.ஏ. வகுப்புகள்

செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கென பி.காம். மற்றும் பி.சி.ஏ. சிறப்பு வகுப்புகளை சென்னை, மாநிலக் கல்லூரியில் அரசு தொடங்கியுள்ளது. ஆண்டுதோறும் 15 செவித்திறன் குறைபாடுடைய மாணவ, மாணவியர் ஒவ்வொரு பிரிவிலும் சேர்க்கப்படுகின்றனர். இதனால் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்கள் செயல்முறை சார்ந்த பட்டப் படிப்பு படிப்பது சாத்தியமாகிறது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.4.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 22. மாற்றுத் திறனாளி சட்ட பட்டதாரிகளுக்கு உதவி

சட்டம் பயின்ற மாற்றுத்திறனாளி மாணவர்கள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்யவும் மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்கவும், மாற்றுத்திறனாளி சட்ட பட்டதாரிகளுக்கு ரூ.3,000/– வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சமாக 25 மாற்றுத் திறனாளி சட்ட பட்டதாரிகள் பயன் பெறுகின்றனர்.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.0.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**23. கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி (ஆசிரியர் பயிற்சி பட்டயம்)**

கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் நோக்கில், கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி, பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அளிக்கப்பட்டு வருகிறது.

**24. அங்கீகாரம் பெற்ற செவித்திறன் குறையுடையோருக்கான பள்ளிகள் மற்றும் பார்வையற்றோருக்கான பள்ளிகளின் சிறப்பு ஆசிரியர்களுக்கு ஊதிய மானியம்**

தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் அங்கீகாரம் பெற்ற செவித் திறன் குறைபாடு மற்றும் பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு ஊதிய மானியமாக மாதம்

ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 212.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 25. பயிற்சி

### 25 (அ) மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சித் திட்டங்கள்

மாற்றுத் திறனாளிகள் சுய வேலைவாய்ப்பு பெறுவதில் சில சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். எனவே, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான திறமைகளை ஊக்குவிக்கும் விதமாக கீழ்க்கண்ட பயிற்சிகள் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன:-

(1) மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப பட்டயப் பயிற்சி (DMLT) (2 ஆண்டுகள்) அரசு மருத்துவ கல்லூரிகளில் நடத்தப்படுகிறது.

(2) பார்வையற்றவர்களுக்கான கணினிப் பயிற்சி (6 மாதம்) பூவிருந்தவல்லியில் அமைந்துள்ள பார்வையற்றோருக்கான தேசிய நிறுவனத்தின் வட்டார மையத்தில் நடத்தப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள பயிற்சி கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் காதுகேளாதோர் கண் பார்வையற்றோர் ஆகிய பிரிவினருக்கு முறையே வழங்கப்படுகிறது. கல்விக் கட்டணம் மற்றும் பயிற்சிக் கட்டணம் உட்பட அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு, பயிற்சியாளர் ஒருவருக்கு மாதம் ரூ.300/– வீதம் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

**2015–16ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.24.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 25(ஆ) மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்க புகைப்படப் பயிற்சி

பல்லூடகப்பயிற்சி பெற்ற நபர்கள் பொழுதுபோக்கு நிறுவனங்களில், குறிப்பாக தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் விளம்பரத்துறை போன்றவற்றில் அதிகம் தேவைப்படுகின்றனர். எனவே, கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட 50 மாற்றுத்திறனாளிகளுக்கு சென்னையில் உள்ள தேசிய

திரைப்பட வளர்ச்சிக்கழகத்தின் வட்டார அலுவலகத்தின் மூலம் ஒரு மாத பல்லூடக பயிற்சி மற்றும் இலக்க புகைப்பட பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் மாற்றுத்திறனாளிகள் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். **2014–2015**ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் **200** மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ.**21.00** இலட்சம் செலவிடப்பட்டது.

**2015–2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 26. செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு பொருத்துநர் பயிற்சி

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில், காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு இரண்டாண்டு கால பொருத்துநர் பயிற்சியளிப்பதற்காக சிறப்பு பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, தற்போது **21** மாற்றுத் திறனாளிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், பயிற்சிக் காலத்தில்

மாதம் ஒன்றுக்கு ரூ.300/– வீதம் உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

**2015_2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ரூ. 5.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 27. இட ஒதுக்கீட்டின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்துதல்

அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு காலிப் பணியிடங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டினை அமல்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தலைமைச்செயலாளர் தலைமையில் பல்வேறு அரசுத்துறை செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவினை அரசு அமைத்துள்ளது. இக்குழு, அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களில் மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கும். இது தொடர்பாக முறையான தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்வித்துறையில், ஆசிரியர் பணியிடங்களைப் பொருத்தமட்டில், 2 விழுக்காடு காலிப்பணியிடங்கள் கண்பார்வையற்றவர்களுக்கும் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் 2 விழுக்காடு காலிப்பணியிடங்கள், காது கேளாதோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் 1 விழுக்காடு காலிப் பணியிடங்கள் கை, கால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட காலிப் பணியிடங்களில், பணியிடம் நிரப்பும் வருடத்தில் மாற்றுத் திறனாளிகள் இல்லாதபட்சத்தில், அப்பணியிடங்களை மூன்று ஆண்டுகளுக்கு முன் கொணர ஆணையிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் (சம வாய்ப்பு, உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995–ல் வலியுறுத்தியுள்ளவாறு மாநில அரசு துறைகளில், தொகுதி ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இதே போன்று, அரசு துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில்,

‘ஏ’, ‘பி’ ‘சி’ மற்றும் ‘டி’ பிரிவுகளில் அனைத்து பணியிடங்களும் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக கண்டறியப்பட்டுள்ளது. தொகுதி ‘ஏ’ மற்றும் ‘பி’ பணியிடங்களில் கூடுதலாக, 170 பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாகக் கண்டறியப்பட்டு, அரசாணை (நிலை) எண் 25 மாற்றுத்திறனாளிகள் நலத்துறை நாள் 14.3.2013ல், ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை (நிலை) எண் 10, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள் 04.03.2014ன்படி, பல்வேறு அரசு துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 1928 பணியிடங்கள் பின்னடைவு பணியிடங்களாகக் கண்டறியப்பட்டு நிரப்பப்பட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## 28. சிறு தொழில்கள் மற்றும் பெட்டிக்கடைகள்

சுய வேலை வாய்ப்பை உருவாக்க பெட்டிக்கடை வைத்தல் மற்றும் சிறு தொழில்கள் துவங்க, அரசு மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், கடன் பெற மாற்றுத்திறனாளிகளுக்கு ஆலோசனைகள்

வழங்கப்படுகிறது. பொது இடங்களில் பெட்டிக்கடை வைக்க மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் தொகையில், மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.10,000/–, இதில் எது குறைவான தொகையோ, அத்தொகை மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 800 மாற்றுத்திறனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கென ரூ.80 இலட்சம் செலவிடப்பட்டது.

**2015–2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**29. பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்**

பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு, சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரும் நோக்கில், மாற்றுத் திறனாளிகள் விளிம்புத் தொகையாக செலுத்த வேண்டிய 5 விழுக்காடு பங்குத் தொகைக்கான நிதியினை, மாநில அரசே ஏற்கிறது. இச்சலுகையினைப் பெற பயனாளிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான நல அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம். இந்த விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு

செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டத் தேர்வுக்குழுவின் முன்பு வைக்கப்படும். இக்குழு, இத்திட்டத்திற்கான பயனாளிகளை தேர்வு செய்யும். இத்திட்டத்தின் கீழ் 2014 – 2015 ஆம் நிதியாண்டில் 31 பயனாளிகள் பயன்பெற்றதன் மூலம் ரூ.5 இலட்சம் செலவிடப்பட்டது.

**2015–2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

## 30. தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் சுய தொழில் திட்டம்

மத்திய அரசின் தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகத்தின் மூலம் சுய தொழில் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க மாநில அரசு முனைப்புடன் செயல்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மூலம் சுய வேலை வாய்ப்புக் கடன் வழங்க, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியினை, செயல்படுத்தும் நிறுவனமாக மத்திய அரசு நியமித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் அருகிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபட்டு, தங்களை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக, மாநில அரசு, கூட்டுறவு வங்கிகளின் மூலம், வட்டியில்லாக் கடனை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வட்டித் தொகை முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

## 31. மாற்றுத்திறாளிகளுக்கு வேலை வாய்ப்பற்றோருக்கான நிவாரணத் தொகை

18 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட வேலை வாய்ப்பற்ற அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளின் நலன் கருதி, மாநில அரசு அவர்களின் கல்வித்தகுதியினைப் பொறுத்து, கீழ்க்கண்டவாறு நிவாரணத்தொகையினை வழங்கி வருகிறது.

| வ. எண் | கல்வித்தகுதி | மாதம் ஒன்றிற்கான நிவாரணத் தொகை | அரசாணை நிலை எண் 21 மாதிந(மாதிந.3) துறை, நாள்23.3.2015ன் படி நிவாரணத் தொகை உயர்த்தப் பட்டது |
|---|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு வரை | ரூ.300/– | ரூ.600/- |
| 2 | மேல் நிலை வகுப்பு | ரூ.375/– | ரூ.750/– |
| 3 | பட்டதாரிகள்/முதுநிலைப்பட்டதாரிகள் | ரூ.450/– | ரூ.1000/– |

இத்திட்டத்தில் பயன் பெற மாற்றுத்திறனாளிகள் வேலை வாய்ப்பகத்தில் குறைந்தபட்சம் ஓராண்டாவது பதிவு செய்து, காத்திருப்பவராக இருக்க வேண்டும். 2014–2015 ஆம் ஆண்டில் 22,517 மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் ரூ.9.96 கோடி செலவிடப்பட்டது.

**2015–2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1107.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 32. பராமரிப்பு உதவித்தொகை

#### 32(அ) மனவளர்ச்சி குன்றியவர், கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கான பராமரிப்பு உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு சேவையினை மேம்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு மாத உதவித் தொகை நபர் ஒருவருக்கு ரூ.1000/– லிருந்து ரூ.1500/– ஆக, 2014–15 ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை 1,13,002 நபர்கள்

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள். இதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | மாற்றுத் திறனாளிகளின் வகைகள் | ஊனத்தின் சதவீதம் | வருமான வரம்பு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றியோர்கள் | 45% மற்றும் அதற்கு மேல் | இல்லை | 96682 |
| 2. | கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் | 75% மற்றும் அதற்கு மேல் | இல்லை | 14437 |
| 3. | தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோர் | 40% மற்றும் அதற்கு மேல் | இல்லை | 1883 |
| | **மொத்த பராமரிப்பு உதவித்தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை** | | | **113002** |

பராமரிப்பு உதவித்தொகை கருவூலம் மூலமாக மின்னனுப்பட்டுவாடா (ECS) முறையில் பயனாளிகளுக்கு அவர்களுடைய வங்கி கணக்கிற்கே அனுப்பப்படுகிறது.

**2015–16ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.20087.00 இலட்சம் மற்றும் ரூ.350.00 இலட்சம் முறையே மனவளர்ச்சி குன்றியோர்கள், கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**32(ஆ) தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை**

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் **2012** டிசம்பர் முதல், மாதம் ஒன்றுக்கு ரூ.**1,000/–** வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகளும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்கள். **2014–2015** ஆம் நிதியாண்டு முதல் கருவூலம் மூலமாக மின்னணு பட்டுவாடா முறையில் **(ECS)** உதவித் தொகை நேரடியாக பயனாளிகளின் வங்கி கணக்கிற்கே அனுப்பப்படுகிறது. **2014–15** ஆம் ஆண்டில் **5280** தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**2015–16 ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.600.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**33. I. மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள்**

மாற்றத் திறனாளிகள் தன்னிச்சையாக வாழ்வதற்காக அவர்களின் தேவைக்கேற்ப மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்கள் மூலம் கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன:–

1. மூன்று சக்கர சைக்கிள்கள்
2. சக்கர நாற்காலிகள்
3. கருப்பு கண்ணாடிகள்
4. மடக்கு ஊன்றுகோல்கள்
5. பிரெய்லி கை கடிகாரங்கள்
6. காதொலிக் கருவிகள்
7. சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய மின்கலன்கள்
8. கால் தாங்கிகள்
9. தோள்பட்டை தாங்கிகள் மற்றும்
10. செயற்கை அவயங்கள்.

கால்தாங்கிகள் மற்றும் செயற்கை அவயங்கள் போன்ற உதவி உபகரணங்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களில் உள்ள முடநீக்கு பிரிவில் பணிபுரியும் முடநீக்கு வல்லுநர்கள் மற்றும் தோல்

பணியாளர்களால் தேவைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு பயனாளிகளுக்கு பொருத்தப்படுகின்றன.

**2015–16 ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**II. நவீன உதவி உபகரணங்கள்**

அ. நவீன செயற்கை அவயம்

ஆ. ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள்

இ. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்

ஈ. காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள்

உ. மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்

ஊ. பார்வைத்திறன் குறைபாடுடைய கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பாடநூல்களின் எழுத்துக்களை பெரிதாகக் காட்டி சுயமாக படிக்க உதவும் கருவி (Magnifier) மற்றும்

எ. விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அதிவேகமாக செயல்படும் நவீன செயற்கை அவயம்

**(அ) மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியருக்கு நவீன செயற்கை அவயம் வழங்குதல்**

நவீன செயற்கை அவயம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலமாக பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. நன்கு இயங்கக் கூடிய வகையிலான நவீன செயற்கை அவயங்கள் (கால் முட்டிக்குக் கீழ்/கால் முட்டிக்கு மேல்/கை முட்டிக்குக் கீழ்) விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. இத்தகைய நவீன செயற்கை அவயங்கள் வாயிலாக மாற்றுத் திறனாளிகள் மற்றவர்கள் துணையில்லாமல் சாதாரண மக்களைப் போலவே சுயமாக சென்று வரவும், தமது அன்றாடப் பணிகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்ளவும் இயலும்.

**2015–16 ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.32.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஆ) ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள்**

ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள், பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு

விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. **2014–2015**ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் **2,071** பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

**2015–16ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.3.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(இ) இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்**

இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கும், ஏனைய மாற்றுத் திறனாளிகளுக்கும் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. **2014–2015**ஆம் நிதியாண்டில் **969** இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் ரூ.**559.99** இலட்சம் செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

**2015–16 ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஈ) செவித் திறன் குறைபாடுடைய மாணவ/ மாணவியர்களுக்கு காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள்**

செவித்திறன் குறைபாடுடையவர்கள் உடலில் அணியும் காதொலிக் கருவிகளை பொது இடங்களில் அணிவதைத் தவிர்த்து வந்ததால், **2012–2013** ஆம் ஆண்டு முதல், ஆறாம் வகுப்பு முதல் கல்லூரி வரை படிக்கும் மாணவர்களுக்கும் **2014–2015** ஆம் ஆண்டு முதல் சுய தொழில் புரிபவர், பணிபுரியும் நபர்களுக்கும் காதுக்குப் பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் **2014–15** ஆம் நிதியாண்டில் **3154** செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

**2015–16ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(உ) மூளை முடக்குவாதத்தால் (Cerebral palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள்.**

மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**2014–15**ஆம் நிதியாண்டில் ரூ.**36.00** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் **656** பயனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள் (C.P. Chairs) வழங்கப்பட்டுள்ளன.

**2015–16ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 36.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஊ) பார்வைக் குறைபாடுடைய மாணவ/ மாணவியர்களுக்கு உருப்பெருக்கிகள்**

**2012–2013**ஆம் ஆண்டு முதல் பார்வைக் குறைபாடுடைய மாணவ/மாணவியர்களுக்கு பிறர் உதவியின்றி தானாகவே படிக்க உருப்பெருக்கிகள் (Magnifiers) வழங்கப்பட்டு வருகிறது. **2014–2015**ஆம்

ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.8.26 இலட்சம் செலவில் 118 பார்வை குறைபாடுடைய மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**2015–16 ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.8.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(ஏ) மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கணைகளுக்கு அதிவேகமாக செயல்படும் நவீன செயற்கை அவயம்**

மாற்றுத் திறனாளிகளுக்கு விளையாட்டு மற்றும் இதர பொழுதுபோக்கு நிகழ்வுகளில் சமவாய்ப்பினை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு அதிக வேகமாக செயல்படும் சக்தியுள்ள நவீன செயற்கை அவயம் (Energy storing carbon fibre foot limb) வழங்க நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டுக்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 34. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் பயணச்சலுகை

மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வண்ணம் அரசு போக்குவரத்து கழகப் பேருந்துகளில் வருமான உச்சவரம்பின்றி பயணச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:-

மாற்றுத் திறனுடைய மாணவ, மாணவியர் தங்கள் இருப்பிடத்திலிருந்து பள்ளிக்கு சென்று திரும்பும் வண்ணம் அரசு போக்குவரத்து கழகப் பேருந்துகளில், கட்டணம் ஏதுமின்றி பயணச் சலுகைகள் வழங்கப்படுகிறது. பார்வையற்றோர் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி, தமது இருப்பிடத்திலிருந்து 100 கி.மீ. வரை, அரசுப் பேருந்துகளில் கட்டணம் ஏதுமின்றி பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். ஏனைய மாற்றுத் திறனாளிகளுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மையம் மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்றுவர இச்சலுகை வழங்கப்படுகிறது. மேலும், பார்வையற்றவரும், கை, கால் பாதிக்கப்பட்டோரும், அரசு விரைவுப் பேருந்துகளில் சொந்த ஊருக்கு சென்றுவர மாநிலத்திற்குள் வருடத்திற்கு ஒரு முறை பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

மனவளர்ச்சி குன்றியவர்கள், துணையாளர் ஒருவருடன் கட்டணமின்றி பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் மாநிலத்தின் எந்தவொரு இடத்திற்கும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் குளிர்சாதன வசதியுள்ள பேருந்தினைத் தவிர்த்து, பிற வகைப் பேருந்துகள் அனைத்திலும் எத்தனை முறை வேண்டுமானாலும் 75% பேருந்து கட்டணச் சலுகையுடன் சென்றுவர அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளருடன் செல்ல அனுமதியும், துணையாளருடன் சேர்த்து 75% பேருந்துக் கட்டணச் சலுகையில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் எவ்வித கட்டணமுமின்றி அனைத்து வகை மாற்றுத் திறனுடைய குழந்தைகளும் துணையாளர் ஒருவருடன் தங்கள் இருப்பிடத்திலிருந்து, ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் முன்பருவப் பள்ளிகளுக்கு சென்று திரும்ப சலுகை வழங்கப்படுகிறது. 2014–2015 நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.2000.00 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**35. மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள்**

உடல் இயக்கக் குறைபாடுடையோருக்கும் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கும் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. 2014–15ஆம் ஆண்டில் 1800 மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் ரூ.72.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.72.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**36. திருமண நிதி உதவித் திட்டம்**

மாற்றுத் திறனாளியைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களை ஊக்குவிக்கும் வண்ணம் திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திருமண நிதியுதவி திட்டத்தில் ரூ.25,000/– மற்றும்

மணப் பெண்ணுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்க நாணயமும் உள்ளடங்கும். பல்வேறு விதமான திருமண நிதியுதவித் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பட்டம் / பட்டயம் பெற்றவர்கள் | மற்றவர்கள் |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றவரை திருமணம் செய்யும் சாதாரணநபர்களுக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/— | நிதியுதவி ரூ.12,500/— |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/— | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/— |
| | | தங்க நாணயம் 4 கிராம் | தங்க நாணயம் 4 கிராம் |
| 2 | கை,கால் பாதிக்கப்பட்டோரை திருமணம் செய்யும் சாதாரண நபர்களுக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/— | நிதியுதவி ரூ.12,500/— |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/— | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/— |
| | | தங்க நாணயம் 4 கிராம் | தங்க நாணயம் 4 கிராம் |
| 3 | காது கேளாத, வாய் பேசாதோரை திருமணம் செய்யும் சாதாரண நபருக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/— | நிதியுதவி ரூ.12,500/— |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/— | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/— |
| | | தங்க நாணயம் 4 கிராம் | தங்க நாணயம் 4 கிராம் |

| | | | |
|---|---|---|---|
| 4 | மாற்றுத்திறனாளியை திருமணம் செய்யும் மாற்றுத்திறனாளிக்கான நிதியுதவி | நிதியுதவி ரூ.25,000/– | நிதியுதவி ரூ.12,500/– |
| | | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.25,000/– | தேசிய சேமிப்பு பத்திரம் ரூ.12,500/– |
| | | தங்க நாணயம் 4 கிராம் | தங்க நாணயம் 4 கிராம் |

இத்திட்டத்தின் கீழ் பயனடைய இலக்கு ஏதுமில்லை. எனவே, திருமண நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த அனைவருக்கும் விடுபடாமல் நிதியுதவி கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.366.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 37. மீட்புத் திட்டம்

குடும்பத்தினரால் கவனிக்கப்படாமல் சாலைகள் மற்றும் இதர பொது இடங்களில் சுற்றித் திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனை / மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களில்

சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. **2014–2015ல், 500** மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனை/மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**2015–2016ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.7.50இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**38. தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு மையங்கள்**

தசைச் சிதைவு நோய் ஒரு மரபியல் நோயாகும். இந்நோயின் தனிப்பண்பாக தசைகள் படிப்படியாக பலவீனமடைந்து, பாதிக்கப்பட்டவர்களின் இயக்கம் முழுமையாக பழுதடைந்துவிடும். இந்நோய்க்கு தொடர் மருத்துவ சிகிச்சையுடன், இயன்முறை சிகிச்சை மற்றும் துணைச் சேவைகளும் அவசியமாகும். தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி, இயன்முறை சிகிச்சை மற்றும் வழிகாட்டுதல் வழங்குவதற்காக சென்னை, வேலூர், மதுரை மற்றும்

திருநெல்வேலி ஆகிய இடங்களில் பகல் நேர பராமரிப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பகல் நேர பராமரிப்பு மையங்கள் அரசு உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.92.30இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 39. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்

மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் கீழ்க்குறிப்பிட்ட சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:–

| | | | |
|---|---|---|---|
| **(1)** | **தனி நபர் விபத்து நிவாரணம்** | | |
| | இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு: | | |
| | (அ) | இறப்பு | ரூ. 1,00,000/– |
| | (ஆ) | கை அல்லது கால் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ.1,00,000/– |
| | (இ) | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ. 50,000/– |
| | (ஈ) | நிரந்தரம், மொத்த ஊனம் ('ஆ' மற்றும் 'இ' தவிர்த்து) | ரூ. 25,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | மாற்றுத் திறனாளி நபருக்கான இறுதிச் சடங்கிற்கு | | | ரூ. 2,000/– |
| 3 | மாற்றுத் திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கு | | | ரூ. 15,000/– |
| 4 | மாற்றுத் திறனாளியின் மகன் அல்லது மகள் கல்வி பயில உதவித் தொகை | | | |
| | (அ) | (i) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகளுக்கு | ரூ. 1,000/– |
| | (ஆ) | (i) | விண்ணப்பதாரரின் +1 வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/– |
| | (இ) | (i) | விண்ணப்பதாரரின் +2 அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ. 1,500/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் +2 தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகளுக்கு | ரூ. 1,500/– |
| | (ஈ) | (i) | விண்ணப்பதாரரின் முறையான பட்டப் படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 1,500/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 1,750/– |
| | | (iii) | விண்ணப்பதாரரின் முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 2,000/– |
| | | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப்படித்தால் | ரூ. 3,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | (உ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் சட்டம் / பொறியியல் மருத்துவம் / கால்நடை அறிவியல் / அல்லது அதற்கு இணையான தொடர்பான தொழிற்கல்விப் படிப்புகள் ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | ரூ.2,000/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.4,000/– |
| | | (iii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 4,000/– |
| | | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப்படித்தால் | ரூ. 6,000/– |
| | (ஊ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்குகளில் படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 1,000/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.1,200/– |
| 5 | **திருமண உதவித் தொகை கணவன் அல்லது மனைவி இருவரும் விண்ணப்பித்தாலும் ஒருவருக்கு மட்டுமே இவ்வுதவி வழங்கப்படும்** | | | ரூ.2,000/– |
| 6 | **வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு பிரசவம் அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கு நிதியுதவி** | | | |
| | 1. மகப்பேறு | | | ரூ.6,000/– |
| | 2. கருச்சிதைவு | | | ரூ. 3,000/– |
| | 3. கருக்கலைப்பு | | | ரூ.3,000/– |
| 7 | **மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க நிதியுதவி** | | | ரூ. 500/– |

10 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் இந்நலவாரியத்தில் சேர்ந்து மேற்காணும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 40. அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தெருக்களில் பிச்சை எடுக்கும் நபர்களுக்காக, அரசு 10 மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவ உதவியும், மறுவாழ்வும் அளிப்பதற்காகவும் இந்த இல்லங்கள் தொடங்கப்பட்டன. கீழ்க்காணும் இடங்களில் இவ்வில்லங்கள் செயல்படுகின்றன.

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் அமைந்துள்ள இடம் |
|---|---|
| 1 | பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2 | உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் |
| 3 | பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 4 | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | மனையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் |

| | |
|---|---|
| 6 | யா.புதுப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 7 | மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம் |
| 8 | செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 9 | தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம் |
| 10 | விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் |

ஒவ்வொரு இல்லத்திலும் அதிகபட்சம் 400 பெரியவர்கள் மற்றும் 25 குழந்தைகளுக்கு தங்குமிடம் அளிக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மருத்துவரீதியாக இந்நோயினை உறுதி செய்த பின்னர், ஒருவர் தானாகவே இவ்வில்லங்களில் சேர்ந்து கொள்ளலாம். குற்றவியல் நீதிமன்ற நடுவரால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட, பொது இடங்களில் பிச்சை எடுக்கும் தொழுநோய் பிச்சைக்காரர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு உணவும், உறைவிடமும், உடையும், மருத்துவ வசதியும், நூலகம், விளையாட்டு கருவிகள், இசைக்கருவிகள் மற்றும் தொலைக்காட்சி ஆகிய பொழுதுபோக்கு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடல் திறனுடைய இல்லவாசிகளுக்கு பாய் நெய்தல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணி தயாரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

தீபாவளி, பொங்கல், குடியரசு தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்தநாள், தொழுநோய் எதிர்ப்பு நாள் மற்றும் ஆண்டு விழா ஆகிய சிறப்பு நாட்களில் பயனாளிகளுக்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளில் இரண்டு இணை ஆடைகள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு ஆண்டும் மைக்ரோ செல்லுலார் ரப்பர் காலணிகள் மற்றும் பாய்கள் வழங்கப்படுகிறது. தட்டு மற்றும் டம்ளர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையும், போர்வைகள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகிறது. 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்களும் குறிப்பேடுகளும் விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள மருத்துவ அலுவலரால் இல்லவாசிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. தேவையான மருந்துகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. கீழ்க்கண்ட பொருட்களுக்கு ஒவ்வொரு இல்லத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருட்கள் | ஆண்டிற்கு செலவின ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | சிறப்பு வகை காலணிகள் மற்றும் செயற்கை அவயங்கள் (தேவைப்படும் இல்லவாசிகளுக்கு) | ரூ.1,000/– |
| 2 | மூக்கு கண்ணாடி வாங்குதல் | ரூ.5,000/– |
| 3 | பல் துலக்கிகள் மற்றும் பற்பொடி | ரூ.2,500/– |
| 4 | விளையாட்டு சாதனங்கள் | ரூ.1,200/– |
| 5 | இசைக் கருவிகள் | ரூ.400/– |

மேலும், அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகள், மரணமடைந்தால் அவர்களது ஈமச்சடங்கு நடத்துவதற்காக ரூ.2,000/– வழங்கப்படுகிறது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1051.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 41. மன வளர்ச்சி குன்றிய 14 வயதிற்கு மேற்பட்டோருக்கான இல்லங்கள்

தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் இல்லங்களில் 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியவர்கள் பாதுகாப்பாக தங்க

வைக்கப்படுகின்றனர். மாநிலத்தில் மொத்தமாக 42 இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வில்லங்கள் வாயிலாக, 1640 மன வளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் பயன் பெறுகின்றனர். உண்டு, உறைவிட வசதி மற்றும் மாற்றுத்திறனாளிகளின் செயல்திறனை உயர்த்துகின்ற தொழிற் பயிற்சியும் இவ்வில்லங்களில் வழங்கப்படுகிறது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.322.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 42. மன வளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களைப் பராமரிக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி

மன வளர்ச்சி குன்றியோரை பாதுகாத்து பராமரிக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி வழங்குகிறது. இந்நிதி உதவியில், புதிய கட்டிட மானியம் அல்லது கட்டட விரிவாக்கம் செய்ய மானியம், வாடகை மற்றும் உணவூட்டு மானியம் ஆகியவை அடங்கும்.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.364.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**43. தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் தேனி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மூன்று பகல் நேர பராமரிப்பு மையங்கள்**

தேனி மாவட்டத்தில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மூன்று பகல்நேர பராமரிப்பு மையங்களில் 90 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். அரசு மானிய உதவியுடன், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இம்மையங்களை செயல்படுத்தி வருகின்றன. 2014–2015ஆம் ஆண்டில் ரூ.11.64 இலட்சம் இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.14.43 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**44. மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் (தசைப்பயிற்சியாளர்/தொழில் முறை பயிற்சியாளர்/ பேச்சுப்பயிற்சியாளர்) ஊதிய மானியம்**

தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மன வளர்ச்சிக் குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப்பயிற்சியாளர்களுக்கு அவர்களது நிறுவனம் வழங்கும் ஊதியம் அல்லாமல், அரசால் ஊதிய மானியமும் வழங்கப்படுகிறது. சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள்(தசைப்பயிற்சியாளர்/தொழில் முறை பயிற்சியாளர்/ பேச்சுப்பயிற்சியாளர்) மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளிகளில் தொடர்ந்து பணியாற்ற, ஊக்குவிக்கும் வகையில் டிசம்பர் 2012 முதல் ஊதிய மானியம் மாதம் ஒன்றுக்கு ரூ.5000/—லிருந்து ரூ.10000/—ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**2015—2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ720.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 45. இரவலர்கள் முகாம், மேல்பாக்கம்

பிச்சை எடுக்கும் குற்றங்களைத் தடுக்கவும், அவர்களை முன்னேற்றப்பாதையில் வழிநடத்தி அவர்களை பயனுள்ள குடிமக்களாக மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் **1954**ம் ஆண்டில் **950** நபர்களுக்கென மேல்பாக்கத்தில் அரசு முகாம் தொடங்கப்பட்டது. தமிழ் நாட்டில் பிச்சை எடுப்பதை தடுக்கும் சட்டம், **1945**ன்படி, தண்டனை வழங்கப்பட்ட இரவலர்கள் நீதிமன்ற ஆணைப்படி தண்டனைக்காலத்தில் அனுமதிக்கப்பட்டு தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உணவும், உறைவிடமும், உடை மற்றும் மருத்துவ வசதியும், அளிக்கப்படுவதோடு நெசவு, தச்சுவேலை, மண்பாண்டத் தொழில் மற்றும் தையல் ஆகிய கைத்தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு, ஆண்களுக்கு இரண்டு துவாலைகள், இரண்டு சட்டைகள் மற்றும் அரைக்கால் சட்டைகளும், பெண்களுக்கு இரண்டு புடவைகள் மற்றும் ரவிக்கைகளும் வழங்கப்படுகின்றன. இவை தவிர, ஆண்டுதோறும் பொங்கல் தினத்தன்று விலையில்லா வேட்டி/புடவை வழங்கப்படுகிறது. இல்லவாசிகளுக்கு பாய்,

படுக்கை விரிப்புகள், தட்டுகள் மற்றும் தேங்காய் எண்ணெயும் வழங்கப்படுகிறது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.126.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**46. மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழல்**

மாற்றுத்திறனாளிகள் எளிதாக இயங்குவதற்கு தடையற்ற சூழ்நிலையை உருவாக்குவதை உறுதி செய்தல் இன்றியமையாததாகும். இதனால், அவர்கள் சமுதாயத்தின் சமூகம் கலாச்சாரம் மற்றும் பொருளாதார நிகழ்வுகளில் பங்கெடுப்பது சாத்தியமாகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழலை உறுதி செய்யும் வகையில், சென்னை பெரு நகரப் பகுதியின் வளர்ச்சி கட்டுமான விதிகளில் ஏற்கனவே திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழல் ஏற்படுத்துவதற்காக, அரசாணை (நிலை) எண் 21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1.2.2013ல், நகராட்சி சட்டங்களில் தேவையான திருத்தங்களை செய்யவும், தமிழ்நாடு நகர்ப்புறம் மற்றும் உள்ளாட்சி

அமைப்புகள் (அடுக்குமாடி கட்டடங்கள் மற்றும் பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு வசதிகள் ஏற்படுத்துதல்) விதிகள் இயற்றவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி, இரண்டு தளங்களுக்கு மேல் இருக்கும் கட்டடங்களில் சாய்வு தளங்கள், மின் தூக்கிகள், கைப்பிடிகள், சிறப்பு கழிப்பறைகள் மற்றும் வாகன நிறுத்தம் ஆகியவை அமைப்பது கட்டாயமாகிறது. இவையல்லாமல் பார்வையற்ற பாதசாரிகள் எளிதில் சாலையை கடந்து செல்வதற்கு ஏதுவாக சாலை சந்திப்புகளில் உள்ள சிவப்பு விளக்குகளில் சப்தத்துடன் கூடிய சமிக்ஞைகள் பொருத்துவதற்காக ரூ. 75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 47. மாநில விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத்திறனாளிகளுக்காக அரும்பணியாற்றிவரும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, சுதந்திர தினத்தன்று பின்வரும் மாநில விருதுகளை அரசு வழங்கி பெருமைப் படுத்துகிறது:-

| வ. எண். | விருதின் பெயர் | விருதின் விவரம் |
|---|---|---|
| 1 | அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த தனியார் தொழிலதிபர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |

| | | |
|---|---|---|
| 2 | சிறந்த நிறுவனம் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு சேவைபுரியும் சிறந்த நிறுவனம்) | 10 கிராம் தங்கப் பதக்கம் ரூ.50,000/– ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| 3 | சிறந்த சமூகப்பணியாளர் விருது (மாற்றுத் திறனாளிகளுக்கு அரும் பணியாற்றியமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | சிறந்த மருத்துவர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 5 | சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் மற்றும் ரூ.25,000/–ரொக்கப் பரிசு |
| 6 | அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கி | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

## 48. அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம்

அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 3 ஆம் நாள், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி மாநில அரசினால் அனுசரிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மற்றும் அவர்களுடைய மதிப்பு, திறமைகள் பற்றிய விழிப்புணர்வினையும், அவர்களது தேவையையும் சமுதாயத்திற்கு உணர்த்தும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது. கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் மாற்றுத் திறனாளிகள் தங்களது பல்வேறு வகையான திறமைகளை வெளிப்படுத்துவதை

ஊக்குவிக்கும் விதமாகவும் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் சுமார் 5000 மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் மற்றவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

இவ்விழாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த நிறுவனம், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த நிறுவனம், சிறந்த ஓட்டுநர் மற்றும் சிறந்த நடத்துனர் ஆகியோருக்கு மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன:-

<u>இதன் விபரம் பின்வருமாறு</u>:-

| வ. எண் | விருதின் பெயர் | விருதின் விவரம் |
|---|---|---|
| 1 | வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த நிறுவனம் | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 2 | சிறந்த பணியாளர்/ சிறந்த சுய தொழில் புரிபவர் விருது (5 பிரிவுகள்) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 3 | சிறந்த ஆசிரியர் விருது (3பிரிவுகள்) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 4 | சிறந்த நிறுவன விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 5 | சிறந்த ஓட்டுநர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 6 | சிறந்த நடத்துனர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |

இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. அரசு / அரசு நிறுவனங்களில் பணி புரியும் மாற்றுத் திறனாளிகள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை கொண்டாடுவதற்காக சிறப்பு தற்செயல் விடுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

**2015–16 ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**49. நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **16.06.2015** அன்று நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்கள் மாநிலம் முழுவதும் **32** மாவட்டங்களிலும், **6** வயதிற்குட்ட குழந்தைகள் பயன்பெறும் வகையில் துவங்கப்பட்டது. ரூ.**4.49** கோடி செலவில் துவங்கப்பட்ட இத்திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக பயனாளிகளின் இருப்பிடத்திற்கே இச்சேவை சென்றடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 16–6–2015 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில், நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனத்தின் சேவையைத் துவக்கி வைத்தார்கள்

## நடமாடும் சிகிச்சைப் பிரிவின் சேவை :

தற்பொழுது **6** வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்ப கால பயிற்சி மையங்கள் மாவட்ட தலை நகரங்களில் உள்ளதால் கிராமப்புறத்திலுள்ள குழந்தைகள் இம்மையங்களுக்கு வர இயலாத நிலை உள்ளது. இத்தகைய குழந்தைகளுக்கு உதவுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நடமாடும் சிகிச்சை பிரிவு வீதம் மாநிலம் முழுவதும் **32** மாவட்டங்களிலும் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் மாவட்டந்தோறும் தொடங்கப்பட்டுள்ளது. இச்சிகிச்சைப் பிரிவுகளில் மறுவாழ்வு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு பணிகளுக்கு தேவையான அனைத்து உபகரண வசதிகளும் அமைக்கப்பட்டு பயனாளிகளின் இருப்பிடத்திற்கே,

இவ்வசதிகள் சென்றடையும் வண்ணம் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**நடமாடும் சிகிச்சைப் பிரிவின் பணிகள்**

1. ஆரம்ப காலத்தில் ஊனத்தை கண்டறிதல்.
2. தசைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி தொழிற் சிகிச்சை அளித்தல்.
3. உதவி உபகரணங்கள், முன் தொழிற் பயிற்சி மற்றும் சிறப்புக் கல்வி ஆகியவற்றின் தேவைகளை மதிப்பீடு செய்தல்.

**செயல்படும் விதம்**

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஊர்தியானது ஒவ்வொரு மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நல அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஒப்புதல்படி பயணங்கள் திட்டமிடப்பட்டு இயன்முறை சிகிச்சையாளர், மறுவாழ்வு பணியாளர், சிறப்பு பயிற்றுவிப்பாளர் ஆகியோர்களுடன் மாவட்டத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று நடமாடும் சிகிச்சைப்பிரிவு செயல்படும்.

**32** மாவட்டங்களிலும் இத்தகைய பயிற்சி **6** வயதிற்குட்பட்ட **14,476** குழந்தைகளுக்கு தேவைப்படும் நிலையில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

குளிர்சாதன வசதியுடன்கூடிய இவ்வாகனம் (A/C Tempo Traveller) சிகிச்சை அறை மற்றும் ஓட்டுநர் அறைகளாக பிரிக்கப்பட்டு, கீழ்கண்ட வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. சிகிச்சை அறை **10**’x **6**’ அளவில் வடிவமைக்கப்பட்டு இதில் இயன் முறை சிகிச்சை, தொழிற் சிகிச்சை, பேச்சுப் பயிற்சி, பிறந்த குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பரிசோதனை மற்றும் உதவி உபகரணங்களின் தேவையினை மதிப்பீடு செய்யும் பணி ஆகியவை மேற்கொள்ளும் வசதிகள் உள்ளன.
2. பல்வேறு குறைபாடுள்ள குழந்தைகளுக்கான விளையாட்டு முறை சிகிச்சை வசதி உள்ளது.
3. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு இயன்முறை சிகிச்சை மேற்கொள்ளுவதற்கான வசதிகள் அனைத்தும் உள்ளன.

4. ஆரம்பகாலத்தில் ஊனத்தை கண்டறிந்து தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தேவையான செய்தி தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி (22 inch LED) குறுந்தகடு இயக்கி (DVD Player) மற்றும் ஒலிப்பெருக்கி சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதால், ஆரம்பகால ஊனம் பற்றிய தகவல்களை தாய்மார்கள் தெரிந்துகொள்ள பயனுள்ளதாகவும் உள்ளது.
5. அரசால் நிறைவேற்றப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் தொடர்பான தகவல் கையேடு, புத்தகங்கள், தகவல் பலகை, மற்றும் பாடல்கள் போன்றவைகளும் இவ்வாகனத்தில் இடம் பெற்றுள்ளன.

தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ள 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகளின் சேவைகள் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

**2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.97.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 50. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் வகையில் அரசு நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தில் அனைத்து மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் வருமான உச்ச வரம்பின்றி பயன்பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தேவையான அடிப்படைத் தகுதிகள் பின்வருமாறு:-

1. தமிழ்நாட்டில் வசிப்பவராக இருக்க வேண்டும். (இதற்கு சான்றாக குடும்ப அட்டையின் நகலினை இணைக்க வேண்டும்)
2. குடும்பத்தில் எவரேனும் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருக்க வேண்டும். (இதற்கு சான்றாக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

இத்திட்டமானது தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில்

பயனாளி செலுத்த வேண்டிய (பிரிமியம் தவணைத்) தொகையினையும் அரசே காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தி வருகிறது. ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு அதிக பட்சமாக ரூ.1.00 இலட்சமும் சிறப்பு மருத்துவத்திற்கு ரூ.1.50 லட்சம் வரையிலும் மருத்துவ உதவிகள் பெறலாம்.

**<u>முடிவுரை</u>:-**

மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது. இதனை அடைவதற்காக இவ்வரசு ஆரம்ப நிலையிலேயே ஊனத்தை கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியும் மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் சமுதாய ஒருங்கிணைப்பை வலுப்படுத்த உரிய நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**பா. வளர்மதி**
சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்